**<u>கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருப்பூர்</u>**

**அசல் வழக்கு எண். 28/2025**

**பி.வா.சா.4 – சிகாபுதின்**

**<u>16–03–2026 சாட்சி அழைக்கப்பட்டு சத்தியப் பிரமாணம் செய்யப்பட்டு வாதி தரப்பில் குறுக்கு விசாரணை/</u>**

1. நான் நாசர்அலியின் மனைவியின் உடன் பிறந்த சகோதரர் என்றால் சரிதான். அதனடிப்படையில் அவர் கேட்டுக்கொண்டதற்காக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் அதற்கு முன்பே அவர் எனது பெரியம்மா ஆவார். பிரமாண வாக்குமூலத்தில் உள்ள விபரங்கள் நாசர்அலி சொல்லி தயார் செய்து வைக்கப்பட்டதில் நான் கையொப்பம் செய்தேன் என்றால் உண்மை எனவும் அதில் தெரிவித்து தாக்கல் செய்யப்பட்டுள்ளது. தாவா சொத்து பாத்திமா பீபிக்கு பாத்தியப்பட்டது என்றால் சரிதான். பாத்தீமா பீபியின் குடும்பத்தின் வரவு செலவு கணக்குகள் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். எவ்வளவு ஆண்டுகளாக தெரியும் என்றால் 35 ஆண்டுகளாக எனக்கு தெரியும்.

2. 35 ஆண்டுகளாக எங்கு எவ்வளவு கடன் வாங்கினார்கள் என்று தெரியாது. அந்த குடும்பத்தில் உள்ள பெண் பிள்ளைகளின் திருமணத்திற்கு என்ன செலவானது என்றால் மும்தாஜ் பேகத்திற்கு 5 பவுன் நகை போடப்பட்டது. சிராஜினிசா 15 பவுன் போடப்பட்டது. மெகராஜ்பேகம் அவர்களுக்கு 15 பவுன் போடப்பட்டது. அதற்கு ஆதாரம் உள்ளதா என்றால் இல்லை. தாவா சொத்தில் வருவாய் ஆவணங்கள் யார் பெயரில் உள்ளது என்றால் பத்திரம் மற்றும் வீட்டு வரி பாத்திமா பீபி பெயரில் உள்ளது. தண்ணீர் மற்றும் கேஸ் ரசீதுகள் நாசர்அலி பெயரில் உள்ளது.

3. நான் சொல்லும் ஆவணங்களை பார்த்துள்ளீர்களா என்றால் பார்த்துள்ளேன். பாத்தீமா பீபி இறக்கும்போது சொத்து யாருக்கு செல்ல வேண்டுமென்று உயில் எழுதிவைக்கவில்லை என்றால் பெரியவர்கள் பேசியபோது திருமணத்திற்கு

செலவு செய்ததால் வீடு நாசர்அலிக்கு என்று பாத்தீமாபீபி சொன்னார். எனக்கு சொத்து பற்றி எந்த விபரமும் தெரியாமல் நாசர்அலியின் மனைவியின் சகோதரி அவருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**குறுக்கு விசாரணை முடிக்கப்பட்டது.**

(1 முதல் 5 பிரதிவாதிகள் மேற்படி குறுக்கு விசாரணையை ஏற்றுக்கொண்டுள்ளார்கள்.)

சாட்சி கூறியபடி என் வாய்மொழிப்படி தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காட்டப்பட்டு, அவரால் சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்ட பின்னர் அவரது கையெழுத்துப் பெறப்பட்டது.

A SUBASHRI
Digitally signed by A SUBASHRI
Date: 2026.03.16 14:43:59 +0530

கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி
திருப்பூர்.